“சிந்துசமவெளி – திராவிடர் நாகரிகம்” என்ற தொல்லியல் ஆய்வு முடிவை ‘திரிப்பதற்குத் திட்டமிடுவதா?

# வரலாற்றைத் திரித்தால், தமிழ்நாடு எரிமலையாகும் - எச்சரிக்கை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, செப். 22 -

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட நாகரிகம் காலத்தால் மூத்தது; கருத்தால் விளைந்தது, பண்பாட்டால் உயர்ந்தது. நமது சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் நகரப் பண்பாடும், வளர்ச்சியும் சிந்துவெளியின் தொல்லியல் ஆகும்.

ஆய்வின்மூலம், தொல்லியல் சர்வ துணையுடன் சர். ஜான் மார்ஷல் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து, மறுக்க முடியாத சான்றுடன்கூட கருதுகோளை முன்வைத்து உலகை வியக்க வைத்தனர்.

**சிந்து சமவெளி நாகரிகத்தைத் திரிப்பதா?**

இந்திய வரலாற்றைத் திரித்து, வேதங்கள், இதிகாசங்கள், புராணங்களோடு மட்டுமே வரலாற்றைத் தொடர்புபடுத்தி, ஏதோ வேத கால நாகரிகம்தான் அது - திசை திருப்பல்கள், திரிபுவாதமும் நிலைத்துவிட வேண்டும் என்று திட்டமிட்டு ஆரியம் முயன்றது. ஓர் ஆய்வாளர் என்கிற தன்மையில், விருப்பு - வெறுப்பு - தற்சார்பு நிலை என்பதற்கெல்லாம் அப்பாற்பட்ட வரலாற்று ஆய்வுக்காகவே தனித்து நின்று அந்த சிந்து வெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்பதை 1924 - செப்டம்பர் 20 ஆம் தேதி ‘தி இல்லஸ்ட்ரேட் லண்டன் நியூஸ் (‘The Illustrated London News‘) என்ற இதழில் சர் ஜான் மார்ஷல் கண்டறிந்ததை உலகுக்கு அறிவித்து ஒரு புது வெளிச்சத்தைப் பாய்ச்சினார்!

இப்போது தமிழ்நாட்டில் கீழடி ஆய்வு - சங்க இலக்கியப் பதிவுகள், தொடர்புகள் குறித்து நமது வரலாற்று ஆய்வாளர்கள் அந்த வெளிச்சத்தின் பரவுதல் - தாக்கம்பற்றி ஆய்வு செய்து வருகின்றனர் என்பது மகிழத்தக்கச் செய்தி! (20.9.2024).

**பொதுக்குழு தீர்மானம்!**

சில மாதங்களுக்கு முன்பே திராவிடர் கழகப் பொதுக்குழு - குடந்தையில் இதை நூற்றாண்டாகக் கொண்டாடிடத் தீர்மானித்தது!

சர். ஜான் மார்ஷல் ஆய்வினால் மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் தொல்லியல் துறைமூலம் கண்டறிந்தவற்றை வைத்து திராவிட நாகரிகம் என்று உறுதி செய்தார்!

அதற்கான ஆய்வு நாயகரான சர். ஜான் மார்ஷல் அவர்களுக்குத் தமிழ்நாட்டில் சிலை அமைப்பதோடு, வரலாற்று ஆய்வின் பொன்னேடு பதித்துள்ள தக்க சான்றோர்களை அழைத்து ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கையும் தமிழ்நாடு ‘திராவிட மாடல்’ அரசு ஏற்பாடு செய்யும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2024) உறுதி செய்துள்ளது மிகவும் பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய ஒன்று!

இதற்கிடையில், சுமார் 1500 ஆண்டுகளுக்குப் பின்னால் உருவான வேதகால நாகரிகமாகக் காட்ட திட்டமிட்டே கால வரிசையில் முன்னுக்குத்தள்ளி, வழமையான தங்களது திரிபு வாதத்தை ஆரியமும், அதன் மத, அரசியல் வெளிப்பாடான ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. அரசும் அதனை வேத கால நாகரிகம் என்று அதிகாரப்பூர்வமாக அப்புரட்டினுக்கு முத்திரை குத்தி நிலை நிறுத்தி, பார்ப்பனர்களையே கொண்ட ஒரு குழு அமைத்து, அரசு இயந்திரத்தின் அச்சையே மாற்றத் தொடங்கி, முழு மூச்சாக இறங்கிவிட்டனர்!

இதைச் சுட்டிக்காட்டி, பல மாதங்களுக்கு முன்பே கண்டித்து எழுதினோம்.

**அமைச்சர் துரைமுருகனின் சரியான கருத்து!**

இதைத்தான் சென்னையில், தி.மு.க. முப்பெரும் விழாவில் தி.மு.க.வின் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் கண்டித்து சரியான கருத்தினைச் சொன்னார்- பொருத்தமாகக் கேட்டார்!

அதனை அடுத்து ஆசிரியர் கடிதமாக, அவர்மீது பாய்ந்துள்ளது

“தற்போதுள்ள சரித்திரத்தால் என்ன கேடு? ஹரப்பா, மொஹஞ்சதாரோ, திராவிட நாகரிகம் என்றோம். அது ஆரியர்கள் நாகரிகம் என, சமீபத்தில் டில்லி அரசு, இந்தியாவின் சரித்திரத்தை மாற்றி எழுதுவதற்காக அமைத்துள்ள கமிட்டி கூறுகிறது. அதாவது, அந்த ஆரிய நாகரிகம், சரஸ்வதி நாகரிகம் என்கிறது!

அந்தக் கமிட்டியில் 17 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்று பேர் அரசு அதிகாரிகள் - மீதி 14 பேரும் ‘பிராமணர்கள்’. எனவே, பழைய பல்லவியைப் பாட வேண்டிய நிலை; இந்த நிலை தொடர்ந்தால், தி.மு.க. தன் வீரியத்தைக் காட்டும் நிலை வரும்“ என்று சரியான எச்சரிக்கையைத் தந்துள்ளார்!

**பார்ப்பனர்கள் திருந்தி விட்டார்களா?**

தி.மு.க. நிகழ்ச்சி அது என்பதால், தி.மு.க. நிலைப்பாடு (வருங்காலத்தில்) இது என்று அறிவித்தது - பெரியார் மண்ணான தமிழ்நாடு கட்சி, மதம், ஜாதி பேதமின்றி கொதித்து எரிமலையாய் வெடித்துக் கிளம்புவது உறுதி! உறுதி!!

இப்போது ‘பார்ப்பனர்கள் திருந்தி விட்டார்கள்‘ என்று சில “தமிழ்ப் புண்ணாக்குகள்“ உளறுகின்றன. அவர்களுக்கு இத்தகவலை கவனப்படுத்தி, இன்னும் ஆரியத்தின் அடிவருடிகளாக காதீர் என்று எச்சரிக்கின்றோம்!

‘சுட்டால்தான் நெருப்பு‘ என்பதுபோல, சுடாமலேயே நெருப்பின் பொறுப்பு அது என்பதை உணர்ந்துகொள்வீர்!

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# டெல்லி முதல்வராக அதிஷி பதவியேற்பு!

## 5 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர்



டெல்லி, செப். 22 -

டெல்லியின் புதிய முதலமைச்சராக அதிஷி பதவியேற்றுக்கொண்டார். மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் 155 நாளாக திகார் சிறையில் இருந்த ஆம்ஆத்மி தலைவரும், டெல்லி முதல்வராகவும் இருந்த கெஜ்ரிவால் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அடுத்த இரண்டு நாள்களிலேயே கெஜ்ரிவால், தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்திருந்தார். தொடர்ந்து, புதிய முதல்வராக அமைச்சர் அடிசி தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த செவ்வாயன்று முதல்வர் பதவியை கெஜ்ரிவால் ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவை ஜனாதிபதி திரவுபதி முர்மு ஏற்றுக் கொண்டார்.

காங்கிரசின் ஷீலா தீட்சித், பாஜகவின் சுஷ்மா ஸ்வராஜ் ஆகியோருக்குப் பிறகு டெல்லியின் மூன்றாவது பெண் முதல்வராக அதிஷி இன்று பதவியேற்றுக்கொண்டார். அதிஷிக்கு டெல்லி துணை நிலை ஆளுநர் சக்சேனா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். முதலமைச்சர் அதிஷியுடன் கோபால்ராய், பரத்வாஜ் உள்ளிட்ட 5 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். பதவியேற்பு விழாவில் கெஜ்ரிவால் உள்ளிட்ட ஆம் ஆத்மி தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இதனைத்தொடர்ந்து வரும் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் சட்டமன்றக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அப்போது புதியதாக அமைந்துள்ள அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு கோர வாய்ப்புள்ளது. ஆம் ஆத்மி கட்சிக்கு பெரும்பான்மை பலம் உள்ளதால், நம்பிக்கை வாக்கெடுப்பில் அடிசி தலைமையிலான அரசு வெற்றி பெறும் என்கின்றனர். இதற்கிடையே டெல்லி சட்டமன்ற தேர்தலை முன் கூட்டியே நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை ஆணையம் ஏற்றுக்கொண்டால், தற்போது முதல்வராக பதவியேற்கும் அடிசி வரும் நவம்பர் மாதம் வரை அதாவது சுமார் இரண்டு மாதங்களுக்கு முதல்வர் பதவியில் நீடிப்பார். தற்போதைய சட்டமன்றத்தின் பதவிக்காலம் வரும் பிப்ரவரி 23ம் தேதி முடிவடைய உள்ளதால், சட்டமன்றத்தின் பதவிக்காலம் முடியும் வரை தேர்தலை நடத்த வேண்டாம் என்று தேர்தல் ஆணையம் முடிவு செய்தால், அடிசியின் பதவிக் காலம் ஐந்து மாதங்கள் வரை இருக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெல்லியின் ஐந்தாவது முதல்வராக வெறும் 52 நாள்கள் (அக்டோபர் 1998 டிசம்பர் 1998) மட்டுமே மறைந்த பாஜக மூத்த தலைவரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான சுஷ்மா ஸ்வராஜ் பதவி வகித்தார். அதன்பின் மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவரான ஷீலா தீட்சித், டெல்லியில் 15 ஆண்டுகள், 25 நாள்கள் முதல்வராக (டிசம்பர் 1998 டிசம்பர் 2013) பதவி வகித்தார்.

இவர் தான் டெல்லியின் மிக நீண்ட முதல்வராகப் பதவி வகித்தார். இவரது தலைமையின்கீழ் காங்கிரஸ் கட்சியானது, மூன்று தேர்தல் வெற்றிகளைப் பெற்றது. இந்த நிலையில் டெல்லியின் மூன்றாவது முதல்வராக அடிசி பதவியேற்க உள்ளார். அதேநேரம் மேற்குவங்க மாநிலத்தின் மம்தா பானர்ஜியை தொடர்ந்து, நாட்டின் தற்போதைய இரண்டாவது பெண் முதல்வராகவும் அடிசி பதவியேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

புழல் எம். நாராயணன் முன்னிலையில் கே.கருணாகரன் வரவேற்பில்

# மாதவரம் 17வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கினார்!

சென்னை, செப். 22 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி, 17 ஆவது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம், வடபெரும்பாக்கம் சின்ன த் தோப்பு பகுதியில் அமைந்துள்ள சமுதாய நல கூடத்தில் நடைபெற்றது

இக்கூட்டத்திற்கு 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் வரவேற்புரை ஆற்றினார்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். கழகத்தில் வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் இளைஞர் அணி இல்லந்தோறும் உறுப்பினர் சேர்த்தல் மற்றும் கழக மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல் ஆகியவற்றிற்கு நிர்வாகிகள் ஒத்துழைப்பு கொடுத்து தீவிரமாக பணியாற்ற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

வட்ட அவைத் தலைவர் ஏ. கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், வட்டக் கழக நிர்வாகி கள் சி. மூர்த்தி, சி. பாலாஜி, சி .டி. ஸ்டாலின், பி. லதா, வி. பார்த்தசாரதி, நா. குமார், கு. ராஜா, பாக முகவர்கள் என். நாகராஜன், டி. திவாகர், வி.சுமீர் ஆகியோருடன்,

மாவட்டத் துணைச் செயலாளர் டி. ராமகிருஷ்ணன், அறிவழகி பாலகிருஷ்ணன், என். பரந்தாமன், பகுதி கழக நிர்வாகிகள் வி. திராவிட வீரன், கௌரிசங்கர்லால், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், 19ஆவது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் என். கவிதா நாராயணன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் எச். பீர்முகமது, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், மாவட்ட விவசாய துணை அமைப்பாளர்கள் பி. வினோத், கே.ராஜ்குமார், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்ரியன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் எம். அமுதா, சுதா, கலைச்செல்வி, ஜி. சேகர், என் .சந்திரன், டி. வெங்கடேசன், ஜே. ஜெய்சங்கர், டி.அமிர்தராஜ், எஸ். பார்த்தசாரதி, ஆர். விஸ்வநாதன், எஸ். பார்த்தசாரதி, எம். என். அஜய் தென்னவன் காவாங்கரை எஸ். முத்துவேல்

வடபெரும்பாக்கம் ஆர். மைலன், ஆர். ஏழுமலை, ஜே. கருணா, ஆர். நீர்வண்ணன், இ. கார்த்திக், எம். கோவிந்தன், எம். மோகன்ராஜ், பி. செந்தில், ஏ. பாலகிருஷ்ணன், எஸ். தினேஷ், எம். என், தளபதி, ஜே. இளையபெருமாள், சின்ன தோப்பு ஜி. முனிவேல், எம். ஏழுமலை, ஜி. செல்வம், கே. சாந்தி, பி. சதீஷ், டி. ஸ்டாலின், விநாயகபுரம் கமலநாதன், சரஸ்வதி நகர் சுரேஷ்,கொசப்பூர் ஜி .ரவிச்சந்திரன், எம். விஜயன்,

தீயம்பாக்கம் இ. சுதர்சன், எம். ஜான்சன், பூபாலன், ஜோசப், அரியலூர் எம். துரை,எஸ். நாகராஜ், சகாதேவன், தெய்வக்குமார், மணி, முருகன், சுரேஷ், தசரதன், ஆனந்த், அன்புமணி, முருகன், தயாநிதி, செட்டிமேடு பி. கீர்த்தி, எம். தமிழ், பி. நாகலிங்கம் ,ஜி. விக்கி,கே. சாந்தகுமார், கே. இனியவன், காந்திநகர் டி.சுந்தரம் ,தியாகி விஸ்வநாததாஸ் நகர் கலைமணி, அண்ணாமலை,குப்பன், எஸ். சுரேஷ் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்

இறுதியாக வட்ட துணைச் செயலாளர் பி.எஸ். பாலாஜி நன்றி கூறினார் .

பொது உறுப்பினர் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை மட்டன் பிரியாணி, சிக்கன் பிரியாணி, கோழி வறுவல் உள்ளிட்ட அறுசுவை அசைவ மற்றும் சைவ உணவுகள் வழங்கப்பட்டன.



மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் மாதவரம் வடக்குப் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் முன்னிலையில், வட்டச் செயலாளர் கே.கருணாகரன் வரவேற்பில், வடபெரும்பாக்கம் சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது. சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொது உறுப்பினர்கள் என 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு சிறப்புரை!

# 119, 119(அ) வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர்கள் லைனர் கே.பிரபு – க.வே.மோகன் அறிக்கை!

சென்னை,செப்.22-

திருவல்லிக்கேணி பகுதி 119, 119(அ) வட்டச் செயலாளர்கள் லைனர் கே.பிரபு - க.வே.மோகன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 119 [அ] வட்டக் கழகங்கள் சார்பாக கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (22.09.2024 ஞாயிறு) காலை 9.30 மணி அளவில் ராயப்பேட்டை நெடுஞ் சாலை வி.எம்.தெரு சந்திப்பு, ஸ்ரீபுரம் முதல் தெரு, கேசர் திருமண மஹாலில் ராயப்பேட்டையில் நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கு வே.கமலா செழியன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி., மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆர்.என்.துரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் வி.பி. பொன்னரசு, மாநில சிறுபான்மையினர் நலப் பிரிவு செயலாளர் மருத்துவர்.அ. சுபேர்கான், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ப.பிரகாஷ், பகுதி துணை செயலாளர் கே.திருநாவுக்கரசு, பொதுக்குழு உறுப்பினர் ரவி ராஜ்குமார், மாவட்ட பிரிதிநிதி ஏ.பி.வேலு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட கழக செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலை குழுத்தலைவர் நே.சிற்றரசு சிறப்புரை யாற்றுகின்றார்.

இக்கூட்டத்தில் வி.என். ராஜன், ஏ.விஜயராஜ், இ. இளம்பாரதி, எம்.கே. அனந்த், எஸ்,எ.எஸ்.ஹபீஸ் வல்லா, ம.தயாநிதி, சி.தினகரன், ரா.பத்மாவதி, எம். பிரேம்ராஜா, ஐ.சி.எப். எம். சங்கர், ஜெ.விஜயகுமார், என்.ரவி, கே.ஜி.செந்தில்குமார், எஸ்.சசிகுமார், வி. தினேஷ்குமார், எ.விக்னே ஷ்வரன் கு.சரவணகுமார், மரு. எம்,டி.சீனிவாசன், எம்.சுமதி, வி.தேசராணி, எஸ்.சித்ரா, வே.சவுந்தர், டி.குப்புசாமி, 119 அ வட்ட கழக நிர்வாகிகள், சி.வாசன், ஜெ.அன்பரசு, கே.ரவி, அ.காமாட்சி, கோ.மகேஷ், எம்.எஸ்.வசந்த், கோ. தனசேகரன், ச.ரமேஷ், ஆர்.ராதாகிருஷ்ண், டி. செபஸ்டின், மோ.பிரபு, எம். அசோக் எம்.நவநீதன், ஆர். சிலம்பரசன், ஆர். புவனேஸ்வரன், எம்.தேவா, க.அருண், எஸ்.மீனா, க.கற்பகம், பி. ஜெயலஷ்மி, ஜெ.மைதிலி, சு.கற்பகம், செ. மீனாட்சி, உ.ஹேமா, டி.சாந்தி,

119-வது வட்ட கழக நிர்வாகிகள் க.பாலாஜி, பி முனுசாமி, டி.ஓர்து, எஸ்.மகேஸ்வரி, பி.சிவா, டி.ஜெயக்குமார், ஆர்.கோபு, பி.ஏழுமலை , பி. பாலசுப்ரமணியம், கே. தினேஷ், ஆர்.ரஞ்சித்குமார், எல்.பாலு, எஸ். ரவீந்திரன், டி.திவ்யா, இ.மாரி, ஆர்.சரவணன், கே.காதர்பாட்சா, ராஜேந்திர பாபு, நூருல்லா, கே.புஷ்ப ராஜ், என்.பாபு, என்.வாசு, பி.டி.சி.வே.மணி, எம். ராஜேஷ், எம்.கதிரவன், இ.குமரன், எஸ்.சதிஷ்குமார், எச்.நந்தகுமார், வி.சிலம்பரசன், பி.மணிகண்டன், உதய் கணேஷ் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

இவ்வாறு வட்ட கழக செயலாளர்கள் லைனர் கே.பிரபு, க.வே.மோகன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

சென்னை மேற்கு மாவட்ட அவைத் தலைவர்

# எம்.டி.ஆர். நாதன் சகோதரர் எஸ்.சேகர் மறைவு!



சென்னை, செப்.22 -

சென்னை மேற்கு மாவட்ட அவைத் தலைவர் எம். டி.ஆர். நாதனின் தம்பி எஸ்.சேகர் அவர்கள் 21.9. 2024 அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (22.09.2024) காலை 10.00 மணியளவில் எண். 20, டேல் பண்ட் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-34ல் இருந்து புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.


இவர் சிறு வயதிலிருந்து இயக்கத்திற்கு அரும்பாடு பட்டவர். கழகம் நடத்தும் அனைத்து போராட்டம், ஆர்ப்பாட்டம் மற்றும் ஊர்வலம் ஆகியவற்றில் கலந்து கொண்டு இயக்க வளர்ச்சிக்கு பாடுபட்டவர். தேர்தலில் பொதுமக்களிடம் (வாக்கு) சேகரிக்க பெரும் பாடுபட்டவர்.

இவரது மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு மு. நடராசன்

### செப்டம்பர் 22 (2004)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.**

**ஆயிரம்விளக்கு பகுதியில் இருபத்தைந்து ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பத்து ஆண்டுகள் பகுதிக் கழகச் செயலாளராகவும், மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்டப் பொருளாளராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**சென்னை மாநகராட்சி 110வது வார்டு கவுன்சிலராக இருமுறையும், மண்டலக்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இவரது பணியினை பாராட்டும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருமுறை கணையாழி பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எஸ்.முத்துக்குமார்

### செப்டம்பர் 22 (2022)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து கோவை பகுதியில் கழகம் வளரபாடுபட்டவர்.**

**1953ஆம் ஆண்டு கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை ஏற்று கலந்து கொண்டதற்காக தண்டனை பெற்று கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.**

**சிறையில் இருந்தபோது, மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்துவிட்டு விடுதலை பெறலாம் என்று அன்றைய அரசாங்கம் சொன்னபோது, “எனது உயிரற்ற உடல் வேண்டுமானால் வெளியே வரும். ஆனால், நான் மன்னிப்பு கேட்டு வெளியே வரமாட்டேன்.” என்று முழக்கமிட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**சிறைவாசம் முடிந்து விடுதலை அடைந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறைவாசலில் வந்து வரவேற்ற பெருமைக்குரியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**